IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.598/2019

Deposition of Witness PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜசேகரன் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் நாமக்கல்லில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது KA முத்துசாமி கிழங்கு மாவு மில்லில் வேலை செய்து வந்தேன். 2012 ஆம் வருடம் பாலசுப்பிரமணியம் என்பவர் மூலமாக எங்கள் கம்பெனியில் இருந்து கிருஷ்ணன் என்பவர் இரண்டு லோடு கிழங்கு மாவு எடுத்துச் சென்றார். அதற்கான காசோலையை எங்களது உரிமையாளர் சண்முகம் என்பவரிடம் கொடுத்தார். அந்த காசோலை பணமில்லாமல் திரும்ப வந்துவிட்டது. அதன் பிறகு எதிரியை பிடித்து விட்டார்கள் என்ற விவரம் தெரிந்து நான் ஈரோடு காவல் நிலையம் சென்றேன்.

அப்போது போலீசார் கிருஷ்ணன் என்பவரை பிடித்து மதியம் அளவில் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். கிருஷ்ணன் மாவு வாங்கியதாகவும்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:37:27 +0530

அதற்கு பணம் கொடுக்கவில்லை என்றும் சொல்லி குற்றத்தை ஒப்புக்கொண்டார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனது முதலாளி சண்முகம் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான்தான் மெய்னாக வசூலுக்கு செல்வேன். கிருஷ்ணன் கொடுத்தது போலி காசோலை ஆகும். போலி காசோலை என்பது வங்கி அதிகாரி தான் சொல்ல முடியும் என்னால் சொன்ன இயலாது என்றால் சரியல்ல. போலி காசோலை என்று சொல்வது பொய் என்றால் காசோலை ரிட்டன் ஆகிவிட்டது. இந்த வழக்கின் புகார்தாரர் யார் என்றால் பாலசுப்ரமணியன். எதிரி காசோலையை யாருக்கு கொடுத்தார் என்றால், கிருஷ்ணன் பாலசுப்பிரமணியத்திடம் கொடுத்து பாலசுப்பிரமணியன் சண்முகத்திடம் கொடுத்தார். அந்த காசோலையானது சண்முகத்தின் கணக்கில் தான் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. எனது உரிமையாளர் சண்முகம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வழக்கு பற்றிய முழு விவரம் தெரியாமல் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:37:34 +0530

நான் கையொப்பம் செய்தேன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் நீண்ட நாள் ஆகிவிட்டதால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. ஏற்கனவே காவல்துறையில் தயார் செய்து வைக்கப்பட்டிருந்த வாக்குமூலத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் செய்த வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டது அல்லது கையால் எழுதப்பட்டதா என்றால் நீண்ட நாள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை.

நீண்ட நாள் ஆகிவிட்டதால் அந்த கையெழுத்து என்னுடையது என்று நான் ஞாபக மறதியாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த வாக்குமூலத்தில் எதிரியிடமிருந்து ஏதாவது கைப்பற்றப்பட்டது அல்லது வேறு ஏதேனும் விஷயம் உள்ளதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் . ஒப்புதல் வாக்குமூலத்தில் என்ன எழுதி இருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் ஆனால் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் கையெழுத்து செய்யவில்லை என்றும் ஏற்கனவே காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.10 18:37:42 +0530